## 2.115 ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர்கள் / ஊர்நல அலுவலர்கள் நிலை / காசாளர் ஆக பதவி உயர்வில் 20.03.98க்கு முன் நியமனம் செய்யப்பட்டவர்கள் பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு செல்வதற்கு விலக்களித்தல்

ஊரக வளர்ச்சி ( இ 7) துறை

அரசாணை (நிலை) எண்.103 நாள் : 22.6.2004

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.11, ஊ.வ. துறை நாள் 12.1.93
2. அரசாணை (நிலை) எண்.52, ஊ.வ. துறை நாள் 20.3.98
3. அரசாணை (நிலை) எண்.22, ஊ.வ. துறை நாள் 7.2.04
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.64498/2003/பி1, நாள்.23.2.2004

**ஆணை**

மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் (நிலை2) / காசாளர் ஆக பணியமர்த்தப்படுவது நேரடி நியமனமாகத்தான் கருதப்பட வேண்டும் எனவும், நேரடி நியமனம் தொடர்பான அனைத்து நடைமுறைகளையும் இத்தகு நேர்வில் தவறாது கடைபிடிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது என்றாலும் பல்வேறு மாவட்ட ஆட்சித்தலைவர்களால் மேற்படி நடைமுறை ஒழுங்காக கடைபிடிக்கப்பட்டு பணியாளர்கள் பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு தகுதிகாண் பருவ காலத்தில் அனுப்பி வைக்கப்படாத நிலை பல்வேறு நேர்வுகளில் எழுந்துள்ளது. மேலும் மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணை வெளியிடப்படுவதற்கு முன்பு பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு அத்தகையோர் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்து அநேக தகுதிகாண் பருவம் நீட்டிப்பு கருத்துருக்கள் அரசுக்கு வரப்பெறுகின்றன. எனவே மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணை வெளியிடப்படும் வரை ஊராட்சி ஒன்றியப் பதிவறை எழுத்தர் / ஊராட்சி எழுத்தர் முதலான கீழ்நிலை பணியிடங்களிலிருந்து இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்படும்போது அந்நியமனம் பணிமாற்றுமுறை நியமனமா அல்லது நேரடி நியமனமா என்ற அய்யப்பாட்டில் இருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. மேலும் ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலே 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அத்தகைய பணியாளர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சி அளிக்கப்படுவது குறித்து அரசிடம் தெளிவுரை கோரியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(1) அனேக இனங்களில் பணிமாற்றுமுறை நியமனப்பணியாளர்கள் தொடர்பான நடைமுறையை பின்பற்றி பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை. இப்படி பயிற்சிக்கு அனுப்பப்படாத பணியாளர்கள் அனைவரும் குறைந்தது 8ஆண்டுகளுக்கு மேல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிபுரிந்து விட்டனர். எனவே அவர்களை தற்போது பவானிசாகர் பயிற்சிக்கு அனுப்புவது கூடுதலாக பலன் எதுவும் அளிக்க வாய்ப்பில்லை. எனவே மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணை வெளியிடப்படுவதற்கு முன்பாக அதாவது 20.3.1998க்கு முன்பாக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதினின்றும் விலக்களிக்கலாம். 20.3.1998க்குப் பின்னர் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நியமனம் செய்யப்பட்டோர் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறாமல் தகுதிகாண் பருவம் விளம்பி ஆணையிடப்பட மாட்டாது.

(2) அதே போன்று இது நாள் வரை கருணை அடிப்படையில் முதலில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் முதலில் பணியமர்த்தப்பட்டு, பின்பு மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையின் படி தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டு அரசின் பணிவரன்முறை ஆணையினை எதிர்நோக்கி பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பப்படாத நபர்களுக்கும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து விலக்களிக்கலாம். மேலும் நிர்வாக காரணங்களினால் தாமதமாக பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெற்றிருந்தால் அத்தாமதத்திற்கும் விலக்களிக்கலாம். இனி வருங்காலங்களில் அத்தகையோர் தவறாது பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. மேலே பத்தி 2லான அரசின் முடிவினை ஒட்டி தனியார் நேர்வெதிலும் உரிய பயிற்சியினின்றும் விலக்களித்து தகுதிகாண் பருவம் விளம்பி ஆணையிட ஏதுவாக உரிய விதித் தளர்வு கருத்துருக்களை உடனடியாக அனுப்பி வைக்க இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

( ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்